**செய்தி வெளியீடு எண்: 737** **நாள்:06.10.2020**

## செய்தி வெளியீடு

புதிய ஒருங்கிணைந்த ஜவுளி கொள்கை 2019 ஐ அமல்படுத்துவதை மறு ஆய்வு செய்யும் நோக்கில் மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவில் (SDPC) (முன்னர் மாநில திட்டக்குழு) 18.09.2020 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பயனாளிகள் மற்றும் அவர்தம் திறன் பயிற்சி தேவைகளை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் அடையாளம் காண்பது தொடர்பாக வலியுறுத்தப்பட்டது.

இத்தருணத்தில், **"தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (TNSDC) திறன் பயிற்சி நடைமுறைப்படுத்துதல்"** என்ற தலைப்பில் காணொலி வாயிலாக பங்கேற்பாளர்களுடன் ஒரு கலந்துரையாடல் கூட்டம் திரு சி. பொன்னையன், மாண்புமிகு துணைத் தலைவர், மாநில வளர்ச்சி கொள்கைக் குழு அவர்கள் தலைமையில் 06.10.2020 அன்று காலை 11.00 மணிக்கு நடத்தப்பட்டது.

திரு அனில் மேஷ்ராம் இ.ஆ.ப., உறுப்பினர் செயலர் அவர்கள் மாநில வளர்ச்சி கொள்கைக் குழு 'தேவையான திறனை பெருக்குவதற்கு நடைமுறை பயிற்சி அளிப்பதன் மூலமும், வேலை தேடுவோரின் வேலை வாய்ப்பை மேம்படுத்துவதற்கு அரசு முகமைகளின் வாயிலாக உரிய திறன் பயிற்சி அளிப்பதும்' இக்கலந்தாய்வின் நோக்கமாகும் என்று கூறினார்.

மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், திரு சி. பொன்னையன் அவர்கள் தனது தலைமை உரையில், திறன் பயிற்சி அளிப்பதன் மூலம் மனித வளத்தின் முன்னேற்றம் மற்றும் செழிப்பு உயர்வடையும் எனவும், குறிப்பாக கைத்தறி ஜவுளித் துறையில் வேலை வாய்ப்பு திறன் மேம்படுத்த பயிற்சி வழங்கப்பட வேண்டியதின் முக்கியத்துவம் குறித்து தெரிவித்தார். பங்கேற்பாளர்கள் (Participants) மற்றும் திறன் பயிற்சி வழங்கும் முகமை (TNSDC) ஆகியோர்களிடையே சீரிய ஒருங்கிணைப்பின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். குறிப்பாக, திறம்பட செயல்படுத்துதல் மற்றும் பயனாளிகளின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சி திட்டங்களை வடிவமைப்பதற்கான வழிவகைகளை கண்டறிய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

திரு வி. விஷ்ணு இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அவர்கள் தனது கழகம் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் மற்றும் பயிற்சி திட்டங்கள் குறித்து விளக்கினார். மேலும், பயனாளிகளின் குறிப்பிட்ட திறன் பயிற்சி தேவைகளை தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கேற்ப பொருத்தமான பயிற்சி தொகுப்பை வடிவமைத்து சிறப்பான திறன் பயிற்சிகளை உருவாக்கி அளிக்க இயலும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வாய்ப்புகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**